நாகப்பட்டினம் நகராட்சி

**2022–ம் ஆண்டு மார்ச் 18 –ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்ற நகரமன்ற சாதாரன கூட்ட நடவடிக்கையின் தீர்மான நகல்**

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 18–03–2022 | பொருள் எண்.1<br>நகரமன்ற துணைத்தலைவர் திரு.எம்.ஆர்.செந்தில்குமார் அவர்களால் முன்மொழியப்பட்டு நகரமன்ற உறுப்பினர் திரு. ஹீ. முஹமது சேக் தாவூத் அவர்களால் வழிமொழியப்பட்டு கொண்டவரப்பட்ட தீர்மானம்.<br>சமூக நீதியுடன் வளர்ச்சியை இலக்காக கொண்டு வெற்றிப்பாதையில் தமிழ்நாட்டை வழிநடத்திடும் மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்களின் நல்லாட்சியின் நீட்சியாக அதிகாரப்பரவலை அடிப்படையாகக்கொண்டு உள்ளாட்சியிலும் நல்லாட்சி என்ற முழக்கத்தோடு சந்தித்து நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் மக்களின் நம்பிக்கையை அபரிமிதமாக பெற்ற முதல்வர் தளபதியை வாழ்த்தி பாராட்டுவதோடு வாக்களித்த மகத்தான வெற்றியை சாத்தியப்படுத்திய வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். | தீர்மானம் எண்.62<br>நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. |
| 18–03–2022 | பொருள் எண்.2<br>நாகப்பட்டினம் நகராட்சி பகுதிகளில் உள்ள தலைவர்கள் சிலைக்கு இரும்பு வேலி (Gril Fencing) அமைக்க மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் 28.02.2022 அன்று நடைபெற்ற சட்டம் ஒழுங்கு ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதன் படி, நகர் பகுதிகளில் உள்ள தலைவர்கள் சிலைக்கு இரும்பு வேலி அமைக்கவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 1.70 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. கூண்டு அமைக்கும் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரிடும் நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. இச்செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கலாம்.<br>ந.க.எண். 810/2021/இ1 | தீர்மானம் எண்.63<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 18–03–2022 | பொருள் எண்.3<br>நாகப்பட்டினம் நகராட்சி 17வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நாகப்பட்டினம் நகராட்சியின் நகர்மன்ற தலைவர் அவர்கள் பயன்பாட்டில் இருந்து வந்த அம்பாசிடர் கார் வாகனம் வாங்கப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்டு தற்போது பயன்படுத்தப்பட இயலாத நிலையில் உள்ளதால் புதிதாக ஈப்பு வாகனம் வாங்க தெரிவிக்கப்பட்டதன் படி புதிதாக ஈப்பு வாகனம் வாங்கிடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 15.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. புதிதாக ஈப்பு வாகனம் வாங்கிடும் கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. இச்செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கலாம்.<br>ந.க.எண். 989/2022/இ1 | தீர்மானம் எண்.64<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>18–03–2022</td>
<td>பொருள் எண்.4<br>நாகப்பட்டினம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனங்களுக்கு 2022–2023ஆம் ஆண்டிற்கான சாலை வரி, பசுமை வரி, வாகன காப்பீடு வாகன தகுதிச்சான்று செலவினம், புதிய பேட்டரி வாங்குதல், பேட்டரி பழுது நீக்கம், வாகன பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு செலவினம் செய்வதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ. 43.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>விபரம்</th><th>தொகை<br>(ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>சாலை வரி</td><td>1.00</td></tr>
<tr><td>2</td><td>பசுமை வரி</td><td>1.00</td></tr>
<tr><td>3</td><td>வாகன காப்பீடு</td><td>5.00</td></tr>
<tr><td>4</td><td>வாகன ஆண்டு தகுதிச்சான்று</td><td>30.00</td></tr>
<tr><td>5</td><td>புதிய பேட்டரி வாங்குதல் மற்றும் பழுது நீக்கம்</td><td>1.00</td></tr>
<tr><td>6</td><td>வாகன பழுது மற்றும் பராமரிப்பு</td><td>5.00</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>43.00</td></tr>
</table>
<table>
<tr><td rowspan="2">அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
<tr><td>2</td><td>வாகனங்களுக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
</table>
ந.க.எண். 951/2021/எச்2</td>
<td>தீர்மானம் எண்.65<br>அ· கு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>18–03–2022</td>
<td>பொருள் எண்.5<br>நகரமன்ற துணைத்தலைவர் திரு. எம். ஆர். செந்தில்குமார் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. 7–வது வார்டுக்குட்பட்ட அளவுகாரன் தோட்டம், வண்ணான் குளம் மேல்கரை,அமிர்தா சுனாமி நிரந்தர குடியிருப்பு ஆகிய பகுதிகளில் உள்ள சாலை முற்றிலும் சேதமடைந்து போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் சிரமம் ஏற்படுவதால் மேற்படி சாலைகளை செப்பனிட்டு தரவும்.<br>2. வண்ணான் குளம் பகுதியில் உள்ள இரண்டு சிறுபாலங்கள் சேதமடைந்துள்ளதை செப்பனிட்டு தரவும்.</td>
<td>தீர்மானம் எண்.66<br>தீர்மானிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>18–03–2022</td>
<td>பொருள் எண்.6<br>நகரமன்ற உறுப்பினர் திருமதி. செ. பதுருநிஷா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. 2–வது வார்டுக்குட்பட்ட ஜடையனா ஹாஜியார் தெருவில் உள்ள முத்து நமிஷா கார்டன் பகுதியில் குடிநீர் வசதி மற்றும் சாலை வசதி ஏற்படுத்தி தரவும்.<br>2. குஞ்சாலி மரைக்காயர் தெரு, கோசா மரைக்காயர் தெரு பகுதியில் குடிநீர் குழாயில் சரிவர குடிநீர் வராததால் பட்டினச்சேரிக்கு செல்லும் குடிநீர் பகிர்மான குழாயில் இணைப்பு ஏற்படுத்தி தரவும்.</td>
<td>தீர்மானம் எண்.67<br>தீர்மானிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>18–03–2022</td>
<td>பொருள் எண்.7<br>நகரமன்ற உறுப்பினர் திருமதி. நா. அஞ்சலி தேவி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>4–வது வார்டுக்குட்பட்ட கீழப்பட்டினச்சேரி மற்றும் மேல பட்டினச்சேரி பகுதி மக்களின் பொது போக்குவரத்திற்கு ரயில்வே நிர்வாகத்தால் சுரங்கச்சாலை அமைத்து தரப்பட்டது. மேற்படி சாலையில் மழைநீர் மற்றும் பூமியின் ஊற்றுநீர் தேங்குவதால் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் மற்றும் பள்ளி, கல்லூரிகளுக்கு செல்லும் மாணவர்களுக்கும் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. அதனால் ரயில்வே சுரங்கப்பாதையில் தேங்கும் நீரினை வெளியேற்ற ஏதுவாக கழிவு நீரேற்று நிலையத்திலிருந்து நிலத்தடி வழியாக பைப்லைன் அமைத்து தரவும்.</td>
<td>தீர்மானம் எண்.68<br>தீர்மானிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>18–03–2022</td>
<td>பொருள் எண்.8<br>நகரமன்ற உறுப்பினர் திரு. ஹ. முகம்மது கபீர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>5–வது வார்டுக்குட்பட்ட மணல்மேடு, யூசுப்பியா நைனா தெருவில் குடிநீர் வசதி ஏற்படுத்தவும், பீரோடும் தெருவில் தார் சாலையினை செப்பனிட்டு தரவும்.</td>
<td>தீர்மானம் எண்.69<br>தீர்மானிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 18-03-2022 | பொருள் எண்.9<br>**நகரமன்ற உறுப்பினர் திருமதி. பா. வனிதா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**<br>1. 6-வதுவார்டுக்குட்பட்டநூர்ஷா தைக்கால்தெருவில்மழைநீர்வடிகால்மற்றும் சாலை வசதி ஏற்படுத்தி தரவும்.<br>2. நாகூர் புதிய பேருந்து நிலையத்தில் நியாய விலை கடை கட்டிடம் அமைத்து தரவும்.<br>3. காதர் மொய்தீன் தோட்டம் வள்ளியம்மை நகருக்கு மழைநீர் வடிகால் அமைத்து தரவும்.<br>4. திருமாநகர், நாகூர் மெயின் ரோடு தீப்பக் நகர் ஆகிய பகுதிகளுக்கு சாலை வசதி மற்றும் குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி ஏற்படுத்தி தரவும். | தீர்மானம் எண்.70<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 18-03-2022 | பொருள் எண்.10<br>**நகரமன்ற உறுப்பினர் திரு. ஐ .ஆசிக் ஹமீது அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**<br>1. 9-வது வார்டுக்குட்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட மின்கம்பங்களில் தெருவிளக்கு பொருத்தப்படாததால் புதிதாக மின் விளக்கு அமைத்து தரவும்.<br>2. புதுமனை தெரு அருகில் உள்ள கண்ணாடி தோட்டம் பகுதியில் பெருமளவில் குடியிருப்புகள் நிறைந்த பகுதியாக இருப்பதால் அப்பகுதிக்கு சாலை வசதி ஏற்படுத்தி தரவும்.<br>3. சம்பா தோட்டம் குடியிருப்பு பகுதியில் உள்ள வீடுகளின் காம்போண்ட் சுவருக்கு உள்ளே இடையூறாக அமைக்கப்பட்டுள்ள மின்கம்பங்களை மாற்றி அமைத்து தரவும். மேற்படி பகுதியில் பழுதடைந்த சாலைகளை செப்பனிட்டு தரவும். | தீர்மானம் எண்.71<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 18-03-2022 | பொருள் எண்.11<br>**நகரமன்ற உறுப்பினர் திருமதி. வி. ரேவதி, அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**<br>1. 10-வது வார்டுக்குட்பட்ட அம்பேத்கார் நகர் வடக்கு மற்றும் தெற்கு, சம்பா தோட்டம் ஆகிய பகுதிகளில் பெருமளவில் குடியிருப்புகள் அமைந்துள்ளதால் மேற்படி பகுதிகளில் குடிநீர் குழாய்களில் அழுத்தம் குறைவாக வருவதால் மேற்படி பகுதியில் புதிதாக நீர்த்தேக்கத்தொட்டி அமைத்து தரவும்<br>2. அம்பேத்கார் நகர் தெற்கு, பீரோடும் தெரு பூந்தோட்டம் மற்றும் SMA கார்டன் பாத்திமா பள்ளி வளாகம் முடுக்கு தாழை சந்து ஆகிய பகுதிகளில் குடிநீர் வசதி மின் விளக்கு வசதி, பாதாள சாக்கடை வசதி செய்து தரவும். | தீர்மானம் எண்.72<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 18-03-2022 | பொருள் எண்.12<br>**நகரமன்ற உறுப்பினர் திருமதி. எம். ஜுலைகா பீவி, அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**<br>1. 14-வது வார்டுக்குட்பட்ட பச்சை பிள்ளையார் கோவில் தெரு, சவேரியார் கோவில் தெரு மற்றும் காடம்பாடி NGO காலனி ஆகிய பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய் அமைத்து தரவும். | தீர்மானம் எண்.73<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 18-03-2022 | பொருள் எண்.13<br>**நகரமன்ற உறுப்பினர் திருமதி. க. சுந்தரேஷ்வரி, அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**<br>1. 20-வது வார்டுக்குட்பட்ட பெருமாள் சன்னதி, பெருமாள் கோவில் 4-வது சந்து, பெருமாள் கோவில் வடக்கு சந்து ஆகிய பகுதிகளில் குடிநீர் சரிவர கிடைக்கப்பெறாததால் தடையின்றி குடிநீர் விநியோகம் அமைத்து தரவும்.<br>2. சிவன் தெற்கு வீதியில் சலவை தொழிலாளர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள இரண்டு சாலைகளை புதுப்பித்து தரவும்.<br>3. சிவன் தெற்கு வீதி, வீரிக்குளம் சந்து ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை இணைப்பினை சீரமைத்து தரவும். | தீர்மானம் எண்.74<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 18-03-2022 | பொருள் எண்.14<br>**நகரமன்ற உறுப்பினர் திரு. தே. மணிகண்டன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**<br>1. 22-வது வார்டுக்குட்பட்ட பப்ளிக் ஆபீஸ் ரோடு, தேவி தியேட்டர் அருகில் பாதாள சாக்கடை கழிவு நீர் குழாய் புதிதாக அமைத்து தரவும். | தீர்மானம் எண்.75<br>தீர்மாணிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 18-03-2022 | பொருள் எண்.15<br>**நகரமன்ற உறுப்பினர் திரு. சே. முகம்மது நத்தர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.**<br>1. 26-வது வார்டுக்குட்பட்ட பொதுமக்கள் நலன் கருதி கல்லுக்கார தெரு நகரவை பள்ளி அருகில் நியாயவிலை கட்டிடம் அமைத்து தரவும்.<br>2.காத்தான் செட்டித்தெருவில் உள்ள சாலை பழுதடைந்து பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக இருப்பதால் மேற்படி சாலையை செப்பனிட்டு தரவும். | தீர்மானம் எண்.76<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 18-03-2022 | பொருள் எண்.16<br>நகரமன்ற உறுப்பினர் திருமதி. கி. கவிதா, அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. 32-வது வார்டுக்குட்பட்ட சட்டையப்பர் மேல வீதியில் மழைநீர் வடிகால் மற்றும் இரண்டு சிறுபாலம் அமைத்து தரவும். | தீர்மானம் எண்.77<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 18-03-2022 | பொருள் எண்.17<br>நகரமன்ற உறுப்பினர் திரு. ப. ஞானமணி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. 36-வது வார்டுக்குட்பட்ட டாடா நகர் பகுதியில் இயங்கி வரும் பாதாள சாக்கடையில் அடிக்கடி அடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் வெளியேறி சாலையில் தேங்குவதால் பொதுமக்களுக்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது. ஆகையால் அவற்றை தூர்வாரி சுத்தம் செய்யவும், பாதாள சாக்கடை தொட்டி கீழே இறங்கியுள்ளதை செப்பனிட்டு தரவும்.<br>2. கழிவு நீரை மறு தொட்டிக்கு கொண்டுசெல்ல தேவையான (5.H.P) மின் மோட்டார் மற்றும் 100 மீட்டர் குழாய் (Hose) அமைத்து தரவும். | தீர்மானம் எண்.78<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 18-03-2022 | பொருள் எண்.18<br>நகரமன்ற உறுப்பினர் திரு. பா.திலகர் அவர்களால் முன்மொழியப்பட்டு நகரமன்ற உறுப்பினர்<br>திருமதி கு. சித்ரா அவர்களால் வழிமொழியப்பட்டு கொண்டவரப்பட்ட தீர்மானம்.<br>நாகப்பட்டினம் நகரமன்றத்தில் உறுப்பினராக பதவி வகித்து காலஞ்சென்ற திரு. ஆர். ஏ. வீராச்சாமி, திரு. எஸ். ஸ்ரீதர், திரு. ஜி. தண்டபாணி ஆகியோர்களுக்கு நகரமன்றத்தில் இரங்கல் நிறைவேற்ற கோரும் தீர்மானம். | தீர்மானம் எண்.79<br>மன்றத்தில் இரங்கள் தெரிவிக்கப்பட்டது. |

/உண்மை நகல்/

(ஒம்) ந, ஸ்ரீதேவி
ஆணையர் மற்றும் தனிஅலுவலர்